**வத்தளை மாபோல நகர சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 18 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 29 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வத்தாளை மாபோல நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்காய்வுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நேரடி உருப்படிக் கையிருப்பிலும் பெறுமதிக்கும் பதிலாக பேரேட்டுப் மீதியாகிய ரூபா 2,755,642 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | உருப்படிச் சொத்துக்களின் பெறுமதி கணக்கிலிடப்பட வேண்டும். | மீதிகளைத் திருத்தம் செய்யும் செயற்திட்ட அறிக்கையின் பரிந்துரைப் பிரகாரம் கையில் உள்ள கையிருப்பு மற்றும் பொதுக் களஞ்சிய கையிருப்பாகிய ரூபா 241,737 கணக்கிலிருந்து நீக்கப்படுவதற்கு சபையின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டில் ரூபா 597,296 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட நூலகப் புத்தகக் கையிருப்புக்குக் கிடைத்த தரகு ஆகிய ரூபா 77,236 சேர்த்துக் கொள்ளப்பட்டு மூலதனமாக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கம் செய்யப்பட வேண்டும். | புத்தகங்களில் குறிப்பிடப்பட்ட வகை நூலகப் புத்தகக் கணக்கிலிடப்பட்டுள்ளன. |

**(ஆ) கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 05 கணக்கீட்டு விடயங்களது மீதிகளுக்கும் துணைப் பதிவேட்டு மீதிகளுக்கிடையேயான மீதிகளுக்கிடையே ரூபா 61,255,165 வித்தியாசமிருந்தது. | குறித்த மீதிகளது வித்தியாசத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இம்மீதிகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறுள்ளது. |

**(இ) பெற வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 டிசம்பர் 31 இல் கொடுப்பனவு பாதுகாக்கப்பட்ட காசோலைக் கணக்கில் இருந்த வரவுப் பெறுமதியாகிய ரூபா 394,951 பதிவேடுகளின் மூலம் உறுதி செய்யப்படவில்லை. அவற்றை இனங்கண்டு தீர்வு செய்யவுமில்லை. | பெற வேண்டிய மீதிகளை அளவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீதிகளைத் திருத்தும் செயற்திட்டத்தின் கீழ் இம்மீதி திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ii) | 2012 ஆம் ஆண்டில் முற் கொடுப்பனவாக ஒப்பந்காரர் ஒருவருக்கு வழங்கப்பட்ட 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 95,074 இறுதிப் பட்டியலில் கழித்துக் கொள்ளப்படவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. | ஏற்றுக் கொள்கின்றோம். இது எதிர்காலத்தில் திருத்தப்படும். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான ஆவணச் சான்றின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மூன்று கணக்கீட்டு விடயங்களின் ரூபா 55,166,020 க்குரிய பட்டோலையும் காலப்பகுப்பாய்வும் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை. | கணக்குகளது மீதிகளை உறுதி செய்யும் சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | மீதிகளைத் திருத்தம் செயற்திட்டத்தின் கீழ் இம்மீதிகள் திருத்தப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 1,475,628 | இரண்டு ஆண்டுகளைக் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது . எதிர்காலத்தில் திருத்தப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 43,238,320 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 25,176,255 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018<br>சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018<br>சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018<br>திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017<br>சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017<br>சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017<br>திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 56,065 | 56,198 | 46,935 | 40,944 | 55,801 | 55,951 | 53,299 | 52,070 |
| (ii) | வாடகை | 14,600 | 11,467 | 15,357 | 10,076 | 14,022 | 11,242 | 15,112 | 18,589 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 400 | 835 | 872 | - | 450 | 461 | 1,396 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 82,878 | 85,277 | 85,277 | - | 79,090 | 35,070 | 35,070 | - |

### 2.2.2 தீர்வையும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் பொருட்டு சொத்துத் தடை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை. தீர்வை நிலுவையை அறவிடுவதில் சபை குறைந்த பங்களிப்பைச் செலுத்தியிருந்தது. | தீர்வை நிலுவையை அறவிடப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 பெப்ரவரி 20 ஆந் திகதியன்று 02 சொத்துத் தடை உத்தியொகத்தர்கள் நியமிக்கப்பட்டு வருவாயை அறவிடுவதில் அதிகரிப்பு ஏற்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2018 சனவரி 01 இல் உள்ளவாறாக தீர்வை நிலுவை ரூபா 5,207,000 ஆகும். ரூபா 23,254,449 ஆகையால் அறவீட்டுச் சதவீதம் 46 - 17 சதவீதமாகிய குறைந்த மட்டத்திலிருந்தது. இதில் 02 நிறுவனங்களிலிருந்து மாத்திரம் ரூபா 43 இலட்சம் அறவிடப்பட வேண்டியுள்ளது. | சொத்துத் தடை அறிவிப்பு வழங்கப்பட்டு நிலுவையான தீர்வையைச் செலுத்துவதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். | எஞ்சிய நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 டிசம்பர் 31 ஆந் திகதியளவில் நகர சபைக்குச் சொந்தமான 29 பாலஹேறனவக்க வீடுகளின் வாடகை நிலுவையாகிய ரூபா 945,540 அறவிடப்படுவதற்கு | வீட்டு வாடகை நிலுவை அறவிடப்பட வேண்டும். | கொடுப்பனவைப் புறக்கணித்த ரூபா 50,000 மேற்பட்ட 09 நிலுவையாளர்கள் தொடர்பாக சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இவற்றின் 09 வீடுகளுக்கு மாத்திரமே சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (ஆ) | நகர சபைக்குச் சொந்தமான ஹொரந்தலைச் சந்தியின் வாவி ஓரத்தில் 04 கடைகளை நிர்மாணிப்பதற்கு 15 ஆண்டுகளுக்கு முன்பு 06 நபர்களுக்கு குத்தகை வழங்கப்பட்டிருந்தது. 2017 யூன் மாதமளிவில் குத்தகைக் காலம் குறைவடைந்திருந்தது. மீண்டும் அவர்களுக்கு சபை தீர்மானித்த போதும், 2019 ஏப்ரல் வரை உடன்படிக்கை ஏற்படவில்லை. இதுவரை வாடகை நிலுவையாக ரூபா 189,000 கொடுப்பனவு செய்யப்படாத போதும், அவற்றைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உடன்படிக்கைப் படி நடவாத கடைகள் சபையால் பெறப்பட வேண்டும். | தற்சமயம் 04 கடைகள் உடன்படிக்கை செய்துள்ளன. மரணமடைந்த ஒருவரது 04 கடைகள் தொடர்பாகச் சிக்கல்கள் உள்ளதால் உடன்படிக்கை 15 ஆண்டுகள் தாமதமாகி உள்ளது. ஏனைய 04 கடைகளையும் சுவீகரிப்பதற்கு 2019 மார்ச் 15 ஆந் திகதியன்று சபை அங்கீகரித்துள்ளது. அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2018 சனவரி 01 இல் இருந்த கடை வாடகை நிலுவை ரூபா 18,589,000 ஆகும். இதில் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டது ரூபா 10,882,968 ஆகையால் அறவீடு 58.6 சதவீதமாகியது. | வாடகை நிலுவை அறவிடப்பட வேண்டும். | எஞ்சிய நிலுவை தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | வருடாந்தப் கேள்விகளைக் கோராது மாபோல 03 ஆம் இலக்க கோழி இறைச்சிக்கடை ரூபா 32,000 மாதாந்த வாடகைக்கு 2018 செப்டம்பர் 01 தொடக்கம் 2021 ஆகஸ்ட் 31 வரையான 03 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | கேள்விகளைக் கோரி குத்தகை வழங்க வேண்டும். | 2018 யூலை 06 ஆந் திகதிய சபைத் தீர்மானத்தின்படி 03 ஆண்டுகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன. சபை நிதி இழப்பிற்கு உள்ளாகாது வருடாந்தம் 10 சதவீத வாடகை அதிகரிப்புடன் வழங்கப்பட்டுள்ளது. |

**2.3.4 ஏனைய வருவாய்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசம்பர் 31 ஆந் திகதியளவில் 02 தொலைத் தொடர்புக் கோபுரங்களிலிருந்து ரூபா 114,667 அறவிடப்படாதிருந்தது. | குறித்த காலத்தில் சபையின் வருவாய் அறவிடப்பட வேண்டும். | குறித்த நிறுவனத்திடம் வரி நிலுவையைச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டில் 3 ஆம் காலாண்டுக்குள்ளால் நிலுவை அறவிடப்படும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பொது வசதிகளாக 04 செயற்பாடுகள் காண்பிக்கப்படடிருந்தன. அதில் 01 செயற்திட்டம் 2017 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்ததாகும். மற்றையது நிறைவேறவில்லை. 2018 நவம்பர் 09 ஆந் திகதியளவில் எஞ்சிய 02 செயற்திட்டங்களும் திட்டமிடல் மட்டத்திலேயே இருந்தன. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அலுவலகக் கட்டிடத்திற்கு சூரிய ஒளி மின்சாரத்தை உருவாக்கும் செயற்திட்டம் பாத்திமா வீதியில் விளையாட்டுத் திடலை அமைத்தல், LED வகை விளம்பரப் பலகையை அமைத்தல், அலுவலகத்தின் முன்புற அமைப்பு என்பன எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். |
| (ii) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் அலுவலக அபிவிருத்தியின் கீழ் 03 செயற்பாடுகள் நிறைவேறவிருந்த போதும், 2018 நவம்பர் 09 ஆந் திகதியளவில் திட்டத் தயாரிப்பு மாத்திரமே நடைபெற்றிருந்தது. | திட்டமிடப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டில் ஹெந்தலை வர்த்தகக் கூட்டுத்தொகுதி பழுதுபார்க்கப்பட்டது. ஹொந்தலைச் சந்தியின் அத்துமீறிய கடைகளை அகற்றி புதிய |

| | | |
|---|---|---|
| | | கட்டிடத்தை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் 2015 - 2030 காலப்பகுதியின் போது அடைய வேண்டிய நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களும் இலக்குகளும் அளவிட்டு அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான சுட்டுகளை இனங்காண்பது, அடிப்படைத் தரவுகளை இனங்காணுதல், வருடாந்த இலக்கை இனங்காணுதல் மற்றும் அவற்றிற்றகாக செயல் நடவடிக்கைத்திட்டத்தைத் தயாரித்தல் என்பன நடைபெறவில்லை. | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரித்து இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி கூட்டிணைந்த திட்டம் 2019 மார்ச் 15 ஆந் திகதியன்று உள்ளூராட்சி அமைச்சுக்கும் உள்ளூராட்சி ஆணையாளருக்கும் (மேல் மாகாணம்) அனுப்பி வைக்கப்பட்டது. |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டில் ஹெந்தலை வர்த்தக்க கூட்டுத் தொகுதியின் பழுதுபார்ப்புக்கென ரூபா 1,921,486 செலவிடப்பட்டிருந்தது. மீண்டும் 2018 ஆம் ஆண்டில் அக்கட்டிடத்தை அகற்றி புதிய கட்டிடத்திற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கமைய, முன்னைய ஆண்டின் செலவினம் விரயமாகியது. | மிகுந்த கவனமாகத் திட்டமிடப்பட வேண்டும். | வர்த்தகச் சந்தை கோரிக்கை விடுத்ததையடுத்து ஹெந்தலை வர்த்தகக் கூட்டுத் தொகுதி அத்தியாவசதியமாகக் நிறைவேற்றப்பட வேண்டுமாதலால் அது நிறைவேற்றப்பட்டது. |
| (ஆ) நகர சபைக்குச் சொந்தமான முன்பள்ளி தற்காலிகமாக நடைபெறுவதற்கு ரூபா 65,000 மாதாந்த வாடகையில் கட்டிடம் வழங்கப்பட்டிருந்தது. பொருட் கொள்வனவு நிபந்தனைக்கேற்ப கட்டிடத்தின் பாதுகாப்பு, | கட்டிட வசதி கருத்திற் கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளர் வாய்மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளார். எதிர்கால நடவடிக்கைகளின் போது எழுத்து மூல அதிகாரம் பெறப்படும். |

| | | |
|---|---|---|
| சுகாதார வசதிகள், வருகை தரும் வழிக்கான வசதிகள் என்பன கவனத்திற் கொள்ளப்படவில்லை. | | |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறு 98 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 255,830 ஊழியர் கடன் மீதி நெடுங்காலமாக அறவிடப்படாதிருந்தது. | பெற வேண்டிய மீதியை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரிடம் ரூபா 282,741 கடன் மீதியில் ரூபா 251,466 பதிவழிக்கப்படுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

## 3.4 பொருட் கொள்வனவு

### 3.4.1 பொருட் கொள்வனவுத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத் திட்டத்தின் பிரகாரம் மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பிற்கென ரூபா 19,000,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும், பொருட் கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவில்லை. | பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் இது தயாரிக்கப்படும். |